# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## 2010 ஆம் ஆண்டு மே மாதம் 07 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி

*(2010.05.10 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

# பிலியந்தல தர்மசாஸ்தரோதய பிரிவேன் விகாரஸ்த சங்வர்தன சபாவ (கூட்டிணைத்தல்)

*(தனியார் உறுப்பினர் சட்டமூலம்)*

**பிலியந்தல தர்மசாஸ்தரோதய பிரிவேன் விகாரஸ்த சங்வர்தன சபாவவைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

கம்பஹா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. கரு ஜயசூரிய அவர்களால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 11.00** **தபாற் செலவு : 5.00**

## பிலியந்தல தர்மசாஸ்தரோதய பிரிவேன் விகாரஸ்த சங்வர்தன சபாவ (கூட்டிணைத்தல்)

ச.வ.-ஓ. (கூட்டி) 61/92

## பிலியந்தல தர்மசாஸ்தரோதய பிரிவேன் விகாரஸ்த சங்வர்தன சபாவைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

*முன்னுரை.*

"பிலியந்தல தர்மசாஸ்தரோதய பிரிவேன் விகாரஸ்த சங்வர்தன சபாவ" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான சபா வொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக் கொள்ளப்பட்ட விதிகளுக்கு இணங்க அதன் குறிக்கோள்களையும் சொல்லப்பட்ட சங்கத்தோடு தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் பயனுறும் வகையில் நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்காக இதன்முன்னர் பிலியந்தலையில் உருவாக்கப்பட்டுள்ளதாதலா லும் :

சொல்லப்பட்ட சபாவ எப்பல்வேறு குறிக்கோள்களுக்கும் நோக்கங்களுக்குமாக உருவாக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் நோக்கங்களையும் அது இதுவரை வெற்றிகர மாக நிறைவேற்றிக் கொண்டுநடாத்துவதை இலயச்செய்வதற்காக அதுகூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கான தாகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தி னால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம், 2010 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, "பிலியந்தல தர்மசாஸ்தரோதய பிரிவேன் விகாரஸ்த சங்வர்தன சபாவ (கூட்டிணைத்தல்)" சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*பிலியந்தல தர்மசாஸ் தரோதய பிரிவேன் விகாரஸ்த சங்வர்தன சபாவக் கூட்டிணைத்தல்.*

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பிலியந்தல தர்மசாஸ்தரோதய பிரிவேன் விகாரஸ்த சங்வர்தன சபாவின் தற்போதைய உறுப்பினர்களாயிருக்கின்றவர்களும் அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இதன்பின்னர் சேர்த்துக் கொள்ளப்படுகின்ற வர்களுமான அத்தகையோரான அத்தனையாட்களும் (இதனகத்துப் பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடுசெய்யப் படும்) "பிலியந்தல தர்மசாஸ்தரோதய பிரிவேன் விகாரஸ்த சங்வர்தன சபாவ" என்னும் பெயர் மகுடத்தின்கீழ் இடையறா வழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக

2-PL 004821 -70 (2010/05)

இருத்தல் வேண்டும். அத்துடன் அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் அது வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும், அவர்கள் விரும்பியாங்கு அதை மாற்றவும் முழுத்தத்துவமும், அதிகாரமும் கொண்டிருத்தலும் வேண்டும்.

**3**. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :- கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

(அ) விகாரையினால் சொந்தமாக வைத்திருக்கப்படும் கட்டடங்களைப் பேணுதலும் அவசியமானவாறும் அவசியமான போதும் எவையேனும் புதிய கட்டடங்களை நிர்மாணித்தலும் பேணுதலும் ;

(ஆ) பௌத்தர்களிடையேயும், இடப்பரப்பிலுள்ள ஆட்களிடையேயும் மத உணர்ச்சியை மேம்படுத்துவதற்கான செயற்பாடுகளை நடாத்துதல் ;

(இ) உறுப்பினர்களின் ஆத்மீக, பண்பாட்டு, சமூக அத்துடன் உடல்சார் சேமநலனுக்கான செயற்பாடுகளை மேம்படுத்துதலும் ஊக்குவித்தலும் அதில் உதவி புரிதலும் ;

(ஈ) பௌத்த சமயத்தைப் பாதுகாத்தலும் பரப்புதலும் ;

(உ) குரு மடங்களையும் கானக ஆச்சிரமங்களையும் தாபித்தலும் முக்கிய குறிக்கோள்களை எய்துவதற்காகத் தோதான சூழல்சார் வசதிகளை ஏற்பாடு செய்தலும் ;

(ஊ) தேவையான தகைமையுடையவர்களும் சமயப் பற்றுக் கொண்டவர்களுமான இளைஞர்களுக்குக் குருப்பட்டமளித்தலும் நான்கு தேவைப்பாடுகளை அவர்களுக்கு ஏற்பாடு செய்து கொடுத்தலும் ;

(எ) தேரவாதி பௌத்த சித்தாந்தத்தையும் அத்துடன் வாழ்க்கைநெறியையும் பாதுகாத்தலும் பரப்புதலும் ;

(ஏ) இலங்கையிலும் வெளிநாடுகளிலும் உள்ள வேறு பௌத்த நிறுவனங்களுடன் சிநேக உறவைப் பேணல் ;

(ஐ) நோயுற்ற குருமாருக்கான ஆசுப்பத்திரியொன்றைத் திறத்தலும் துறவி வாழ்க்கையை நடாத்துகின்ற எல்லா குருமாருக்கும் மருத்துவ வசதிகளை ஏற்பாடு செய்தலும்;

(ஒ) குருமாருக்கு ''தம்ம''வையும், ''வினய''வையும் கற்பித்தலும் யோகாசன அப்பியாசங்களில் அவர்களுக்குப் பயிற்சியளித்தலும், பாளி, சிங்களம் மற்றும் ஏனைய கீழைத்தேய, மேற்கத்திய மொழிகளில் அவர்களைத் தேர்ச்சியுள்ளவர்களாக்குதலும் ;

(ஓ) இளம் சந்ததியினருக்கு “தம்ம” பற்றிய அறிவை வழங்குவதற்கு “தம்ம” பாடசாலைகளைத் தாபித்தலும்;

(ஔ) புத்தரின் போதனைகளில் அடங்கியுள்ள செய்தியை எடுத்துச் சொல்லுதல் அத்துடன் உலக சமாதானத்தை மேம்படுத்தும் நோக்கத்தோடு பௌத்த கலாசாரத்தைப் பரப்புதல் ;

(க) கல்வி, கலாசாரம் பரப்புகை, நிலைத்துநிற்றல், அபிவிருத்தி, சமாதானம் ஆகியன தொடர்பிலான உலக விவகாரங்கள்மீது அரசாங்கம் சார்ந்த, அரசாங்க சார்பற்ற சர்வதேச ஒழுங்கமைப்புக்களினாலும், அவை சமய ஒழுங்கமைப்புக்களாக இருந்தாலும் சரி சமயச்சார்பற்ற ஒழுங்கமைப்புக்களாக இருந்தாலும் சரி கூட்டப்படும் மாநாடுகளிலும், கருத்தரங்குகளிலும், உலக பௌத்த சமுதாயத்தினரின் சார்பில் ஏதேனும் விடயத்தின்மீது பௌத்த கருத்து நோக்கினைச் சமர்ப்பித்தலும் ;

(ங) பௌத்த நோக்கில் நிலைத்துநிற்றல், அபிவிருத்தி, சமாதானம், கல்வி, கலாசாரம் ஆகியவற்றின் உடனிகழ்வான உலக விவகாரங்கள் தொடர்பிலான கற்கைகளைத் தொடங்குதலும் ஒருங்கிணைத்தலும் உதவுதலும், அத்துடன் அத்தகைய கற்கைகளின் பெறுபேறுகளை வெளியிடுதலும் ;

(ச) உலக பௌத்த தலைவர்களும், பண்டிதர்களும் ஒன்று கூடுவதற்கு வசதிகளை ஏற்பாடு செய்து கொடுத்தல் ;

(ஞ) சமாதான விருப்புடைய பௌத்த கற்கைக் குழுக்களுக்கும், தியானக் குழுக்களுக்கும், பொதுசன தொடர்புக் குழுக்களுக்கும், செயற்குழுக்களுக்கும் ஆன ஆவணப் படுத்துகை நிலையமொன்றாகப் பணியாற்றுதலும் அத்துடன் தகவல் பரிமாற்றத்துக்கும், அனுபவ பகிர்ந் தளிப்புக்கும் ஏற்பாடு செய்தலும் ;

(ட) நூல்கள், ஆராய்ச்சி அறிக்கைகள், பருவ சஞ்சிகைகள், வேறு ஆவணங்கள், செவிப்புல, கட்புல உபகரணங்கள், திரைப்படங்கள், பதிவுநாடாக்கள் ஆகியவற்றைக் கொண்ட நூலகமொன்றைத் தாபித்தலும் கூட்டுத்தாப னத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு விரும்பத்தக்க தெனக் கருதப்படக்கூடியவாறான அத்தகைய வேறு சேவைகளை ஏற்பாடு செய்தலும் ;

(ண) ஞானம், அவற்றுடன் கருணை அடிப்படையிலான பௌத்த நோக்கில் சித்த சுகாதாரம், ஆளுமை அபிவிருத்தி, தேசிய ஒருமைப்பாடு, உலக சமாதானம் மீது இளைஞர்களுக்கான கருத்தரங்குகளையும், வேலைக்களங்களையும், மாநாடுகளையும் நடாத்து தலும் ;

(த) உலக சமாதானத்தை மேம்படுத்துவதற்கு பௌத்த சம்மேளனத்துடனும், வேறு சமயசார்புள்ள அத்துடன் மதச்சார்பற்ற சர்வதேச ஒருங்கமைப்புகளுடனும், அவை அரசாங்க ஒழுங்கமைப்பாக இருந்தாலும் சரி, அரசாங்க சார்பற்ற ஒழுங்கமைப்புகளாக இருந்தாலும் சரி உடனின்று உழைத்தலும் ;

(ந) பௌத்த சமய தத்துவங்களின் கல்வியிலும் அத்துடன், கல்வியின் வேறு நவீன தத்துவங்களிலும், சமகாலச் சமுதாயத்திற்கு ஏற்ற கல்விக் கோட்பாடொன்றை விருத்தியாக்கும் நோக்கத்துடன், சமய தத்துவங்களில் ஒப்பீடுசார்ந்த கல்வியை மேற்கொள்ளுதலும் ;

*(ப)* *இலங்கையில் இளைஞர்களுக்கான வாழ்க்கைத் தொழிற் கல்வியை நடாத்துதல் ;*

*(ம)* *சிறுகைத்தொழில்களில் மாணவர்களைப் பயிற்றுவதுடன், அவர்களை நற்குடி மக்களாக்குவதற்காக அவர்களுக்கு நிதி அல்லது வேறு உதவிகளை அளித்தல் ;*

*(ர)* *பாடசாலைகளையும், கல்வி நிறுவனங்களையும் தாபித்து, அத்துடன் பேணிவருவதன் மூலமும், புலமைப் பரிசில்களை வழங்குவதன் மூலமும் கல்வியை வளரச் செய்தலும் மேம்படுத்தலும் ;*

*(ன)* *வறியவர்களுக்கும் அநாதையாக்கப்பட்டவர்களுக்கும் பிணியாளர்களுக்கும் வைத்திய நிவாரணம், உணவு, உடை அத்துடன் இருப்பிடவசதி வழங்குதலும் ;*

*(ய)* *வயதானவர்களுக்காகவும் கைவிடப்பட்டவர்களுக்காகவும் அநாதை விடுதிகளையும் இல்லங்களையும் நிறுவிப் பேணுவதுடன் சமூக நலன்புரி நிலையங்களையும் அமைத்தல் ;*

*(வ)* *வலது குறைந்தவர்கள், செவிடர், குருடர் அத்துடன் ஊமைகளுக்கான நலனோம்பு வசதிகளைச் செய்தல் ;*

*(ற)* *கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களை முன்னெடுத்துச் செல்வதில் ஈடுபட்டுள்ள பிக்குமார், தொண்டர்கள் அத்துடன் வேறு ஆட்கள் என்போருக்குப் புலமைப் பரிசில்கள், நிதி போன்றவற்றை வழங்குவதன் மூலம் அல்லது வேறுவழியில் உதவி வழங்குதல் ;*

*(ழ)* *கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களை முன்னெடுத்துச் செல்வதற்கான பெரஹராக்கள், கண்காட்சிகள், விரிவுரைகள், கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள், வேலைக்களங்கள், வகுப்புகள், விவாதங்கள், மாநாடுகள், உல்லாசப் பயணங்கள், சுற்றுலாக்கள் என்பவற்றை அல்லது வேறு நடவடிக்கைகளை மேம்படுத்தலும் ஒழுங்குசெய்தலும் அத்துடன் நடாத்துதலும்;*

(ல) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களை ஒத்த நோக்கங்களையுடைய வேறு நிறுவனங்கள், அமைப்புகள் அத்துடன் சங்கங்கள் என்பனவற்றுடன் கூட்டுச்சேர்ந்தும் இணைந்தும் செயற்படுதல் ;

(ள) ஏதேனும் கைத்தொழில், வியாபாரத்தில் அல்லது இறக்குமதி ஏற்றுமதித் தொழிலில் ஈடுபடுதலும் ஏதேனும் கமத்தொழில், கைத்தொழில் அல்லது வர்த்தக முயற்சிகளைத் தாபிப்பதற்கும் அவருக்கு உதவியாக அல்லது துணையாக இருத்தல் ; தொழில் நுட்பத் திறமைகளில் ஆட்களை வெற்றிகரமாகப் பயிற்றுவிப்பதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை ஏற்பாடு செய்தலும் ; அத்துடன் பிரசாரப் பணியை ஒழுங்கு செய்தலும் ; அத்துடன்

(அஅ) கூட்டுத்தாபனத்தின் மேற்கூறப்பட்ட நோக்கங்கள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எதனையும் எய்துவதற்கு அவசியமான அல்லது இடைநேர்விளைவான அத்தகைய வேறு எல்லாக் காரியங்களையும் கருமங்களையும் செய்தல்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

**4**. இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவைப்படும் வங்கிக் கணக்குளைத் தொடங்கவும் நடாத்தவும் முடிவுறுத்தவும் பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றி பணம் கடன் வாங்கவும் அல்லது பணத்தைத் திரட்டவும் மானியக் கொடைகளையும் நன்கொடைகளையும் பெறவும் அல்லது சேகரிக்கவும் அதன் நிதிகளை முதலீடு செய்யவும் தேவையான ஆளணியினரை வேலையிலீடுபடுத்தல், வேலைக்கமர்த்துதல், வேலைநீக்கஞ் செய்தல் ஆகியவற்றுக்கான தத்துவங்களுட்பட கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனும் ஒன்றைச் சீர்படுத்துவதற்கு அல்லது மேம்படுத்துவதற்குத் தேவையான அல்லது தகுந்த எந்த வகையிலேனும் எல்லாக் காரியங்களையும் செய்வதற்கும் நிறைவேற்றுவதற்கும் அத்துடன் செயற்படுத்துவதற்குமான தத்துவமும் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

**5.** (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் அப்போதைக்கு வலுவிலுள்ள கூட்டுத்தாபன விதிகளுக்கு அமைய பணிப்பாளர் நாயகம், கௌரவ செயலாளர், கௌரவ பொருளாளர் ஆகியோரையும் அவ்விதிகளில் ஏற்பாடு செய்யப்படக்கூடியவாறும் அதற்கிணங்கவும் தெரிவு செய்யப்பட்ட வேறு ஆறு பேருக்குக் குறையாத எண்ணிக்கையானோரையும் கொண்ட முகாமைக் குழுவொன்றின் மூலம் நிர்வகிக்கப்படுதல் வேண்டும். *கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் உள்ளது எது எப்படியிருப்பினும் பிலியந்தலை தர்மசாஸ்தரோதய பிரிவேன் விகாரையின் அதிபர் சங்கைக்குரிய பெத்திகமுவ ராகுல தேரர் அவர் முன்னரே பதவி விலகினாலன்றி இக்கூட்டுத்தாபனத்தின் சீவிய காலப் பணிப்பாளர் நாயகமாக இருத்தல் வேண்டும் என்பதுடன், அவருக்குப் பின் அடுத்துறும் சீவியகால பணிப்பாளர் நாயகம் ஒருவரை நியமித்தலும் வேண்டும். இவரும் முன்னரே பதவி விலகினாலன்றி சீவியகாலத்துக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(3) இக்கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைக்குழு இச் சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று பதவி வகித்தவர்களும் ; அத்துடன் இச்சட்டத்துக்கான அட்டவணையில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவர்களுமான சபாவவின் முகாமைக் குழுவின் உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும்.

**6.** (1) ஏதேனும் பொதுக்கூட்டத்திலும், சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றிலிரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் வாக்குப் பெரும்பான்மை கொண்டும், பின்வரும் கருமங்களுள் எல்லாவற்றுக்காகவும் அல்லது எவற்றுக்காகவும் இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளையாக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும். *கூட்டுத்தாபனத்தின் விதிகள்.*

(அ) உறுப்பாண்மையை வகைப்படுத்தலும், உறுப்பினர்களைச் சேர்த்தலும், மீளப்பெறுதலும் அல்லது விலக்குதலும் ;

(ஆ) பதவிதாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல், பதவி தாங்குநர்கள் பதவிநீங்குதல் அல்லது பதவியை வறிதாக்குதல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் அத்துடன் அவர்களது தத்துவங்களும், நடத்தையும், கடமைகளும் ;

(இ) முகாமைக்குழு உறுப்பினர்களைத் தெரிவுசெய்தலும் அதன் தத்துவங்களும், நடத்தையும், கடமைகளும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் முகாமைக்குழுவின் அல்லது ஏதேனும் உபகுழுவின் கூட்டங்களில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைமுறையும் அக்கூட்டங்களைக் கூட்டுதலும், நடாத்துதலும் அத்தகைய கூட்டங்களின் நேரம், இடங்கள், கூட்டம் பற்றிய அறிவித்தல்களும் நிகழ்ச்சிநிரலும் அவற்றின் கூட்ட நடப்பெண்ணும் அதில் அலுவல்களை நடாத்துதலும் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்களினதும் முகவர்களினதும் சேவையாளர்களினதும் தத்துவங்களும் நடத்தைகளும் கடமைகளும் பணிகளும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும், முகாமைசெய்தலும் அதன் நிதிகளின் கட்டுக்காப்பும் அதன் கணக்குகளைப் பேணலும் கணக்காய்வு செய்தலும் ;

(எ) பொதுவில் கூட்டுத்தாபன அலுவல்களை முகாமை செய்வதற்கும், அதன் குறிக்கோள்களை எய்துவதற்கும்.

(2) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதி, அதே போன்ற ஒரு கூட்டத்திலும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதி ஒன்றைப்போன்று அதேமுறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அத்துடன் சேர்க்கப்படலாம் அல்லது இல்லா தொழிக்கப்படலாம்.

(3) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முந்திய நாளன்று வலுவிலுள்ள சபாவவின் விதிகள் அவை இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதன வாகவிராத அளவுக்கு, இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) கூட்டுத்தாபன உறுப்பினர்கள் அப்போதைக்கு வலுவிலுள்ள கூட்டுத்தாபன விதிகளுக்கு அமைந்தோராதல் வேண் டும்.

*சபாவிடமிருந்து செல்மதியாக உள்ளனவும் அதற்குச் செலுத்தப் படவுள்ளனவுமான கடன்கள்.*

**7**. இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று சபாவவுக்குரிய எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படுதலும் கொடுத்துத் தீர்க்கப்படுதலும் வேண்டும் என்பதுடன் சபாவவுக்கு வருமதியாகவுள்ள எல்லாக் கடன்களும் செலுத்தப்படற்குரிய ஒப்பப்பணங்கள், உதவுதொகைகள் ஆகியனவும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ள அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்.*

**8**. ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, குத்தகை அல்லது ஏதேனும் இறுதிவிருப்பாவணக் கையளிப்பின் மீது அல்லது வேறுவகையாக அதற்கு உரித்தாகக்கூடிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளவும் வைத்திருக்கவும் கூட்டுத்தாபனம் சட்டப்படி ஆற்றலும் தகுதியும் உடையதாதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஆதனமெல்லாம், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமையவும், அதனை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறு வகையில் கையாள உள்ள முழுத்தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**9**. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, முகாமைக் குழுவின் ஓர் உறுப்பினரினதும் கௌரவ செயலாளரினதும் அல்லது முகாமைக்குழுவால் உரியமுறையில் அதிகாரமளிக்கப்பட்ட அத்தகைய வேறு ஆளினதும் முன்னிலையிலும் அன்றி எத்தன்மைத்தான சாதனமெதிலும் பொறிக்கப்படுதலாகாது. அவர்கள் தாங்கள் சமுகமளித்தமைக்கு அடையாளமாக சாதனத்தில் தங்கள் பெயர்களை எழுதி ஒப்பமிடுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஒப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சியொருவராக ஒப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதலும் வேண்டும்.

*குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணல்.*

**10**. இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் அல்லது இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்கள் மூலம்,

அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமைகோருபவர்களும் தவிர்ந்த வேறெவரேனும் ஆட்களினதும் உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**11.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

அட்டவணை (பிரிவு 5 (3))

| | | |
|---|---|---|
| பணிப்பாளர் நாயகம் | - | சங்கைக்குரிய பெத்திகமுவே ராகுல தேரர் |
| கௌரவ செயலாளர் | - | திரு. எச்.எ. சந்திரதாச நாதுகல |
| கௌரவ பொருளாளர் | - | திரு. சுனில் பெரேரா |
| உபதலைவர் | - | திரு. பியசிறி ராஜபக்ஷ |
| | - | திரு. பி.பி. கமகே |
| பிரதான போஷகர் | - | திரு. சிறிநாத் டீ மெல் அவர்கள் |
| | - | டென்சில் அபொன்சு |
| | - | திரு. டி. எல். டபிள்யு குமாரகே |
| கணக்குப் பரிசோதகர் | - | திரு. மஞ்சுல சமரசேகர |
| நிர்வாகசபை | - | திரு. ஜகத் ரத்னபால |
| | - | திருமதி மானெல் பெரேரா |
| | - | திருமதி யசவதி நேரங்கல |
| | - | திருமதி வயி முனசிங்க |
| | - | திரு. லலித் ஹெட்டிஆரச்சி |
| | - | திரு. எம்.ஏ. பிரேமதாச |

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்